New Master
INSTITUTE
B M.G. Lane, JAFFNA
A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 3-00 மணி

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25

A/L 89
பிரிவு: II
ஆரம்பம் 28-03-87
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குகாதாசன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் -
தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் -
திரு நல்லையா
New Master
INSTITUTE
B M G. Lane, JAFFNA.

சுடர் 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 9 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 22 (23-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 99

போராட்ட சரித்திரத்தில் மற்றொரு சாதனை

# யாழ். பண்ணை பொலீஸ் விடுதி மீது புலிகள் தீரத்துடன் திடீர்ப் பாய்ச்சல்!

## 8 சிப்பாய்கள் சிக்கினர்

### பலர் பலி; ஆயுதங்கள் மீட்பு நான்கு போராளிகளும் வீரமரணம்

-அலுவலகச் செய்தியாளர்:- க. இரத்தினராஜசிங்கம்-

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். பண்ணை பொலீஸ் விடுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று அதிகாலை 1-15 மணியளவில் திடீர் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் திடீர்ப்பாய்ச்சலில் எட்டு சிப்பாய்கள் வளைத்துப் பிடிக்கப்பட்டனர். நான்கு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

ஏனையோர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு புறமுதுகிட்டு ஓடித் தப்பினர்.

பெருந்தொகையான ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் மீட்கப்பட்டன.

பொலீஸ் விடுதிப் பக்கத்தில் நிலைகொண்டிருந்த படையினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்த மோதலில் 4 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிலமன், ராஜ்மோகன், பண்டிதர், அருண் ஆகிய நான்கு போராளிகளும் இந்த மோதலில் தாயகத்துக்காக தமது உயிரை ஈந்து வீரமரணமடைந்தனர்.

சுமார் பத்துப் போராளிகள் இந்த மோதலில் காயமடைந்தனர்.

அதிகாலை வேளையில் எதிர்பாராத விதமாக புலிகள் பொலீஸ் விடுதி மீது திடீர் பாய்ச்சல் நடத்தியபோது அங்கு காவலில் இருந்த சிப்பாய்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடித் தப்ப முயன்றனர்.

அவர்களில் எட்டுப் பேர் புலிகளினால் வளைத்துப் பிடிக்கப்பட்டனர். பல சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பண்ணை விடுதியில் ஆங்காங்கே விழுந்து கிடக்கின்றன.

புலிகளினால் பிடிபட்ட எட்டுப் பேரும் பாதுகாப்பான ஓரிடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் தாக்குதலினால் நிலைகுலைந்த படையினர் பின்னர் யாழ். நகர மக்கள் மீது கொடூரத் தாக்குதலைத் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலினால் மக்கள் பீதியடைந்தனர் எனினும் காலையில் புலிகளின் வெற்றிச் செய்தி வெளியானதையடுத்து ஆங்காங்கே கூடி நின்று ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். (உ-10)

### ஆஸ்பத்திரியும் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இன்று அதிகாலையில் கோட்டை முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ் ஆஸ்பத்திரியின் பல பகுதிகள் சேதமடைந்தன.

19 ஆம் இலக்க வார்ட்டில் விழுந்த ஷெல் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

பழைய வெளிநோயாளர் பகுதியை மூடிய கட்டத்தில் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஷெல் குண்டுச் சிதறல்களினால் பல கண்ணாடி ஜன்னல்கள், கண்ணாடிப் பொருள்கள் உடைந்து நொருங்கியுள்ளன.

படையினரின் கொடூரத் தாக்குதலினால் யாழ் ஆஸ்பத்திரியிலிருந்த நோயாளர்கள் மிகவும் பீதியடைந்த நிலையில் இருக்கின்றனர்.

வடபகுதி சுகாதாரப் பணிப்பாளரின் அலுவலகமும் அதிக சேதமுற்றிருக்கிறது. இக்கட்டடம் பல ஷெல் குண்டுகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. (உ)

### விடுதி சேதம்

யாழ்ப்பாணம் மார்ச் 23

புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான பண்ணை பொலீஸ் விடுதி பலத்த சேதம் அடைந்திருக்கிறது.

இன்று அதிகாலைவரை அங்கு நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகள் காலையில் அங்கிருந்து தமது பழைய இடத்துக்குத் திரும்பினர். (உ)

முச்சந்தி முனி



இன்னொருக்கா நைஜீரியார் பரிமாற்றம் எண்டு அச்சாணியார் இறங்கி வருவார் ஆனால் இனிமுந்தின மாதிரி அவருக்கு அது இலேசான விடயமாக இருக்காது என்றுங்கோ!

இன்று காலை கிட்டு பேட்டி:

### தற்காப்பு யுத்தம் தாக்குதல் யுத்தமாக மாறிவிட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 23

எமது தற்காப்பு யுத்தம் தாக்குதல் யுத்தமாக மாறியுள்ளது இதுவரையும் இராணுவத்தை வெளியேறவிடாது தற்காப்பு யுத்தத்தை மேற்கொண்டிருந்தோம் இப்போது நாம் தாக்குதல் முயற்சிகளுக்கு மாறி உள்ளோம்

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு இன்று திங்கள் காலை அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார்

தமிழ் மக்கள் மீது இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது

அரசு தொடர்புச் சாதனங்கள் அரசபடைகள் வெற்றியீட்டி வருகின்றன என்று தம்பட்டம் அடிக்கின்றன.



கிட்டு

தமிழ் மக்கள் மீது இராணுவம் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது

புலிகளின் வரலாற்றில் இது மாபெரும் சாதனை

(4ஆம் பக்கம் பார்க்க)

விசேட பதிப்பு

### எம். ஜி ஆருக்கு ஜனாதிபதி பதவி?

சென்னை, மார்ச் 23

தமிழ்நாடு முதலமைச்சர் பதவியை இந்திரா காங்கிரஸுக்கு விட்டுக் கொடுத்தால், ஜனாதிபதி பதவியை திரு எம் ஜி இராமச்சந்திரனுக்கு வழங்குவது பற்றி இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் தீவிரமாக பரிசிலனை செய்துவருகிறது.

—இப்படி சென்னை அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

ஜனாதிபதி ஜெயில்சிங்கின் பதவிக்காலம் ஜூலையுடன் முடிவடைகிறது.

பிரதமருடனான கருத்து வேற்றுமை காரணமாக திரு. ஜெயில்சிங்குக்கு மீண்டும் ஜனாதிபதி பதவி கிடைக்கமாட்டாது. இது நிச்சயமாகிவிட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதிபதவி யாருக்குக் கிடைக்கும் என்று பலவித ஹேஷ்யங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

துணை ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு பி வி. நரசிம்மராவ் ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதி பதவிக்குப் பரிசிலனை செய்யப்பட்டுவந்தன.

இப்போது புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக சென்னை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அ. தி. மு க-இந்திராகாங்கிரஸ் கூட்டணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதி கைவிடப்பட்டது

இன்று திங்கள் அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் திடீர்த் தாக்குதலின் போது அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பண்ணை பொலீஸ் விடுதி இன்று அதிகாலையிலேயே அவர்களினால் கைவிடப்பட்டது.

தமது தாக்குதலை வெற்றிகரமாக முடித்த கையோடு விடுதியைக் கைவிட்டு தமது பழைய நிலைகளுக்குப் புலிகள் திரும்பினர். (உ-10)

# அப்பாவி மக்கள் மீது சிப்பாய்கள் 5 மணி நேரம் கொடூரத் தாக்குதல்

### ஹெலியும், பொம்மரும் புரிந்த அட்டகாசம் 2 பேர் பலி; 50க்கும் அதிகமானோர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இன்று அதிகாலை 1.15 முதல் நகரின் நாலா புறமும் அகோர ஷெல் தாக்குதல்களும், பொம்மர், ஹெலிக் கொப்டர் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

சுமார் 5 மணிநேரம் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களினால் பொதுமக்கள் இருவர் உயிரிழந்தனர். ஐம்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்- பெருந்தொகையான உடைமைகள் நாசமாகின.

நகரின் இன்ன இடம் என்று குறிப்பிட்டுக் கூற முடியாதவாறு நாலும் நகரை அண்டிய பகுதிகளும் கடும் தாக்குதல்களுக்கு இலக்கானது.

கோட்டை முகாமிலிருந்து அடுத்தடுத்து ஏவப்படும் ஷெல் குண்டுகள் ஒருபுறம்; நகரை அண்டிய பகுதிகளை சுற்றிச் சுற்றி வட்டமிட்டு வேட்டுக்களை மழை போல பொழிந்த ஹெலிகொப்டர்கள் ஒருபுறம்; சத்தமிடாமல் பறந்து வேட்டுக்களைத் தீர்த்த பொம்மர் ஒருபுறம்; புலிகள் நடத்திய பதில் தாக்குதல் ஒருபுறம் என இன்று அதிகாலை யாழ்நகரே யுத்தகளமாய்த் தோன்றியது

அதிகாலையில் நகர் எங்கும் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது

பயங்கர சத்தத்துடன் விழுந்து அடுத்தடுத்து வெடித்த ஷெல் குண்டுகளினால் நகரின் பல வர்த்

(4ஆம் பக்கம் பார்க்க)



எரிபொருள் தடையைக் கண்டித்து நேற்று யாழ் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் (படப்பிடிப்பு:- ஜெயம்)

### நகரில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 23

அரசின் எரிபொருள் தடையை எதிர்த்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ் செயலகத்தைச் சென்றடைந்தது.

செயலகத்தில் ஒரு பொதுக் கூட்டமும் இடம்பெற்றது

பொதுக் கூட்டத்தில் பொது அமைப்புக்கள் பலவற்றின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெண்களே பெருமளவு காணப்பட்டனர்.

சிவ சாயிகளும், மாணவ, மாணவியரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

சுபமுகூர்த்தம்
23-03-1987
திங்கட்கிழமை
சுபநேரம்
12-17 முதல் 1-47 வரை
கருடனம்
7-47 முதல் 9-17 வரை
சஷ்டி முற்பகல்
8. 14 வரை நவமி
வைகறை 5 50 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

## தேவை

யாழ் மாவட்ட தேர்தல் தொகுதி அடிப்படையில் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விளம்பரம் சேகரிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 28-3-87ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர எண் - 57, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

சி. டி. 200ரக மோட்டார் சைக்கிள் தேவை. விண்ணப்பிக்குக. விளம்பர எண் 60, C/o உதயன், யாழ்ப்பாணம்.

## விடகைக்கு

யாழ் கிரேசன் சந்தியிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 677, அம்பாள் கிரோசர்ஸ், கிரேசன் சந்தி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

Hyline (ஹைலைன்) வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் செலுத்தி 1 வாரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.


# புங்குடுதீவில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு!

## கலன் 80 சதம்

புங்குடுதீவு, மார்ச் 23

புங்குடுதீவில் தற்பொழுது நிலவும் கடும் வரட்சியினால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு உதவும் பொருட்டு சமூக சேவைப் பகுதியினர் தாமதமின்றிக் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு வே. க. சோமசுந்தரம் யாழ் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

இது தொடர்பான விரிவான மகஜர் ஒன்றை அவர் பொது மக்கள் சார்பில் யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர், யாழ் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கும், மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவில் குடிதண்ணீர் கஷ்டம் தலைதூக்கியுள்ளது. இதனால் இப்பகுதி மக்களும் நிறுவன ஆஸ்பத்திரி வைத்தியசாலை நோயாளிகளும் பெரிதும் அவதியுறுகிறார்கள்.

புங்குடுதீவின் ஒருசில பகுதிகளில் ஒரு கலன் தண்ணீர் 80 சதமாக விற்பனை செய்யப்படுகிறது. வேலணை சாட்டியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டே இங்கு விற்பனை செய்யப்படுகிறது. இவற்றை ஒரு சில மக்களே பெறக் கூடியதாகவுள்ளது.

சென்ற 1986 ஆம் வருடம் இது விடயமாக சமூக சேவைப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் இறுதியில் புங்குடுதீவுப் பகுதிக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை.

ஆதலால் இம்முறையும் அந்நிலை ஏற்படாத வகையில் உரிய நேரத்தில் உரிய காலத்தில் தண்ணீர் வழங்கப்பட வேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ-131)

## பெற்றோர் தினவிழா

சாவகச்சேரி, மார்ச் 23

சரசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை பெற்றோர் தின விழா அதிபர் திரு. ஏ. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. தம்பிராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இளைப்பாறிய அதிபர் பண்டிதர்ச. வயிரவப்பிள்ளை சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றினார். (இ-31)

## முன்னாள் அதிபர் சுகவீனம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி பத்மா இராமநாதன், யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-எ)

## கிளிநொச்சியில் கிராம சேவகருக்கு மீண்டும் வேலை

கிளிநொச்சி, மார்ச் 23

எட்டு மாதங்களுக்கு முன் வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட கிளிநொச்சி கிராம சேவகர் மீண்டும் சம்பளத்துடன் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்.

சுமார் 75 ஆயிரம் சனத்தொகைகொண்ட கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவில் நெடுங்காலம் கடமையாற்றி வந்த கிராம சேவகர் திரு எஸ். தனபாலசிங்கம் கடந்த ஜூலை மாதம் முதல் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பின்பேரில் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

பின்னர் இவர் கடமை புரிந்த கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவு கிழக்கு, மேற்கு என இரண்டாக வகுக்கப்பட்டு கிராம சேவையாளர் கடமைகளைக் கவனிக்க கிராமசேவகர் திரு எஸ். ஜீவரத்தினமும், திரு. எம் தர்மபாலனும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட திரு எஸ். தனபாலசிங்கம் கடமைக்கு செல்லாதிருந்த காலப் பகுதிக்குரிய முழுச் சம்பளத்துடன் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் வேலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவியை மீண்டும் கிளிநொச்சியில் ஆரம்பித்த போதிலும் இவர் கடமையிலிருந்த காலத்தில் இவருக்கு உருத்திரபுரம் பகுதிக்கு இடம் மாற்று உத்தரவு கிடைத்திருந்ததால் இவர் தற்போது உருத்திரபுரம் கிராம சேவகராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-76)

ஒரே மாதத்தில்

## வங்கி முற்பணத்திற்கு வட்டி கழிக்கப்பட்டது ஏன்?

### ஆசிரியர்கள் கேள்வி

வட்டுக்கோட்டை, மார்ச் 23

யாழ் கல்வித் திணைக்களத்தினால் ஆசிரியர்களுக்கு இம் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்ட வங்கி முற்பணத்திற்கு இம்மாதமே (மார்ச்) வட்டியும் சேர்த்துக் கழிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வட்டிப் பணம் ஆசிரியர்களுக்குத் திருப்பி வழங்கப்பட வேண்டுமென்றும் ஆசிரியர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

இதுவரை காலமும் ஆசிரியர்களுக்கான விழா முற்பணமும் வங்கி முற்பணமும் பெப்ரவரி மாதங்களிலேயே வழங்கப்பட்டு வந்தன.

மார்ச் மாதங்களில் முற்பணங்களுக்கான கழிவுகளும் வங்கி முற்பணத்திற்கான வட்டியும் கழிக்கப்பட்டு வந்தன.

இவ்வாண்டு மாத்திரம் மார்ச் மாதத்தில் இந்த முற்பணங்கள் வழங்கப்பட்டு மார்ச் மாதத்திலேயே அதற்கான மாதாந்தக் கழிவுகளும் கழிக்கப்பட்டுள்ளன. (இ-161)

## மீண்டும் உயர்தர வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் இரு ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை மீண்டும் ஜீ சி ஈ (உயர்தர) வகுப்புக்கள் ஆரம்பமாக இருக்கின்றன.

ஜீ சி ஈ. (உயர்தர) பிரிவு கலை, வர்த்தக வகுப்புக்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் என வித்தியாலய அதிபர் திரு. எஸ். எம் மூர்த்தி தெரிவித்தார். (உ)

# விளையாட்டரங்கு

## இந்து - சென். ஜோன்ஸ் துடுப்பாட்டம் சோபிக்கவில்லை

— விளையாட்டுச் செய்தியாளர்:- சன். ஜோன்சன் —

யாழ்ப்பாணம் மார்ச் 23

வடக்கின் வலம் வாய்ந்த பாடசாலைகள் கிரிக்கெட் அணிகள் எனக் கருதப்படும் யாழ். இந்து-சென்ஜோன்ஸ் கல்லூரி மோதலில் பந்து வீச்சாளர்களின் கையே ஓங்கியிருந்தது. துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை இரு தரப்பினரும் எதிர்பார்த்தபடி உச்ச எண்ணிக்கையை அடைய முடியவில்லை.

இந்த ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.

கடந்த வெள்ளி, சனிக் கிழமைகளில் நடைபெற்ற இந்த சினேக பூர்வ கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 106 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது தெரிந்ததே

எஸ் பி பிரபானந்தன் 33, கே எஸ் ரவிக்குமார் 24, எஸ் சுரேஷ் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரி சஞ்சீவன் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பி ரவிராஜன் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ரி அகிலன், ஏ வாகீசன் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய சென். ஜோன்ஸ் அணியின் துடுப்பாட்டமும் சோபிக்கவில்லை. இந்த அணி 135 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ் எஸ். புவனரெட்ணம் 19, கே ஏ ஞானசேகர் 20, ஏ வாகீசன் 31, எம். நிசாம் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே. எஸ். ரவிக்குமார் 28 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களையும் கே. கார்த்திகேயன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எஸ் உமையாளன், எஸ் கே. புவனேந்திரன், கே. பிரேம்நாத், எஸ் பி பிரபானந்தன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் யாழ் இந்து அணி ஓரளவு சிறப்பாக ஆடியது. இந்த அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எஸ் கே புவனேந்திரன் ஆட்டமிழக்காமல் 51, எஸ் சுரேஷ் 25, கே பிரேம்நாத், பி பத்மபிரகாஷ் ஆகியோர் தலா 21, எஸ் ஸ்ரீகாந்த் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏ. வாகீசன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ரி சஞ்சீவன், ஜி. நேசகுமார் ஆகியோர் முறையே 31, 40 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி பெற 136 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் அணி இறுதியாகக் கிடைத்த 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். எஸ். புவனரெட்ணம், எஸ் ஜெய்சங்கர் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 44, 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ் உமையாளன் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கே. எஸ் ரவிக்குமார் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் மத்தியஸ்தர்களின் தீர்ப்புகள் குறித்து பார்வையாளர்கள் ரசிகர்கள் மத்தியில் அபிப்பிராய பேதம் காணப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (உ-7)

மூன்றாவது தடவையும்

## ராஜன் கதிர்காமர் கிண்ணம் யாழ்ப்பாணக் கல்லூரியிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 3 ஆவது தடவையாகவும் சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி அணி இந்தகேடயத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 46 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது

ஆர். குலசிங்கம் அபாரமாக ஆடி 63 ஓட்டங்களைப் பெற்றார்.

ஓ வி கே எம். செந்தூர்வாசன் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், ஆர். பி. சவுந்தரநாயகம் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பி ஆதவன் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், எம். ஆர். மோகன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் அணி 45 4 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

பி. ஆதவன் 33, வி ஆர். மோகன் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

என் நித்தியராஜன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஆர். ஸ்ரீதேவன், எஸ் ரெறன்ஸ் சுதாகரன் ஆகியோர் முறையே 29, 26 ஓட்டங்களுக்கு தலா இரண்டு விக்கெட்டுக்களையும் எஸ் விஜயகுமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஆட்டத்தின் சிறப்பு வீரராகவும் ஆர். குலசிங்கம் தெரிவானார் இவர் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்.

சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் என். நித்தியராஜனும்—

சிறந்த பந்து தடுப்பாளராக சென் பற்றிக்ஸ் அணியின் விக்கெட் காப்பாளர் எம். பி. பவிஸ்ரரும் தெரிவாகினர்.

இவர்களுக்கு ஷப்ரு யுனிக்கோ பிறைஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வெற்றிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன.

இந்தப் போட்டியிலும் மத்தியஸ்தர்களின் தீர்ப்புகள் குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டது (உ7)

## சுன்னாகத்தில் நடந்த சைக்கிள் ஊர்வலம்

சுன்னாகம், மார்ச் 23

மனித உரிமைகளை மீறும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து சைக்கிள் ஊர்வலம் ஒன்று சுன்னாகத்தில் நடைபெற்றது.

மனிதஉரிமைகள்பாதுகாப்புஸ்தாபனம் பொதுநல ஸ்தாபனங்களின் ஆதரவுடன் ஒழுங்கு செய்த இந்த ஊர்வலம் மயிலணி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக இருந்து ஆரம்பித்தது.

ஊர்வலத்துக்கு முத்தமிழ்மன்றச் செயலாளர் நாயகம் திரு கே மகாதேவன் தலைமைவகித்தார்.

ஊர்வலம் சுன்னாகம், கந்தரோடை, கலட்டி, உடுவில், இணுவில், மருதனார்மடம் ஊடாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனைச் சென்றடைந்தது.

பதின்மூன்று கோரிக்கைகளை அடக்கிய மகஜரை சுன்னாகம் கூட்டுறவு ஊழியர் சமாசத் தலைவர் திரு எஸ். பேரின்பநாயகம் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்திடம் கையளித்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு கோரினார். (இ-27)

இனப்பிரச்சினைத் தீர்வில்

## "இணைப்பு-சி"க்கு அப்பாலும் இலங்கை சென்று விட்டது --பிரதமர்

கொழும்பு, மார்ச் 23

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் எமது அரசாங்கம் 'இணைப்பு-சி' க்கு அப்பாலும் சென்று விட்டது

பிரதமர் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

இந்திரா காந்தி பதவியில் இருந்தபோது திருமதி பண்டாரநாயக்கா தந்தி அனுப்பவில்லை. அப்போது குதிரை லாயத்தில் இருந்தது.

இப்போது தான் பிரதமர் ராஜீவ் காந்திக்கு திருமதி பண்டாரநாயக்கா தந்தி அனுப்பியிருக்கிறார்.

ஆனால் இப்போது குதிரை லாயத்தில் இல்லை; வெளியே போய் விட்டது

குதிரையை வெளியே விட்ட பின்னர் லாயத்தை பூட்டுவது மாதிரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் செய்கை உள்ளது

இப்படி பிரதமர் தெரிவித்தார். (இ-எ)

# அனுராதபுரம் திரும்ப 250 குடும்பங்களுக்கு உத்தரவு

## நிவாரண உதவிகள் நிறுத்தம்

முழங்காவில், மார்ச் 23

அனுராதபுரத்திலிருந்து வெளியேறி வட பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள 250 குடும்பங்களுக்கும் அரசு இதுவரை அளித்துவந்த நிவாரண உதவிகளை நிறுத்தியுள்ளது.

இவர்களை உடன் அனுராதபுரத்தில் மீளக் குடியேறுமாறு அரசு பணித்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. தெய்வசிகாமணி தெரிவித்தார்.

அரச அதிபர் தமது அலுவலகத்தில் கிளிநொச்சி பிரஜைகள் குழுக்கள், தனியார் நிறுவன பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மேலதிக அரச அதிபர் (காணி) திரு எஸ். முருகவேளும் கலந்துகொண்டார்.

அரச அதிபர் அநுராதபுர அதிகள் பற்றி மேலும் தெரிவிக்கையில், மீளக்குடியேற அநுராதபுரம் திரும்பும் குடும்பங்களுக்கு அரசு படிப்பணம் வழங்க முன்வந்துள்ளது என அநுராதபுர அரசஅதிபர் அறிவித்துள்ளார் என்றார்.

பெரியவர்களுக்கு 75 ரூபாவும், சிறுவர்களுக்கு 50 ரூபாவும் பிரயாணப் படியாக வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-ள ரி)

# சிறந்த சேவையாளரை மக்கள் மறக்க முடியாது

வட்டுக்கோட்டை, மார்ச் 23

இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களை பாராட்டுவதன் முக்கிய நோக்கம் இளஞ்சந்ததியினரை உணர வைப்பதற்கும் அவர்களைப் பின்பற்றி நடப்பதற்குமே ஆகும்.

நல்லவர்கள்- வல்லவர்களை நாம் என்றென்றும் பாராட்ட வேண்டும்.

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலம் சேவை செய்து வெளிமாவட்டத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ள வைத்திய கலாநிதி அ. மகாலிங்கத்துக்கு வட்டுக்கோட்டை, அராலி பொதுமக்களால் நடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் வித்துவான் திரு இ. பாலசுப்பிரமணிய ஐயர் பாராட்டுரை வழங்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை பிரசைகள் குழுத்தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபருமான திரு. ந. சிவஞானம் தலைமையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி 'ஒட்லி கோல்' மண்டபத்தில் இப்பாராட்டு விழா நடைபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உபஅதிபர் திரு. இ. தர்மகுலசிங்கம் பேசும் போது வைத்திய கலாநிதி மகாலிங்கம் அரச சேவையில் இருந்தும் கடவுள் எனச் சேவை செய்து மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர் என்றார்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலய முன்னாள் அதிபர் செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் திரு க. மயில்வாகனம் உரையாற்றும் போது, வட்டுக்கோட்டை, அராலி மக்கள் மத்தியில் மங்காப் புகழ் பெற்றவர், நீங்காத நினைவுடையவர் வைத்திய கலாநிதி அ. மகாலிங்கம் என்றார்.

திரு. க. மாசிலாமணி உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-161)

## முற்பணம்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்கும் வட்டி இல்லாது மூன்று மாதகால சம்பளத்தினை முற்பணமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (76)

## யொவன்புர கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இம்மாதம் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை அனுராதபுரத்தில் நடைபெற உள்ள 'யொவன்புர' கொண்டாட்டங்களில் தமிழ் இளைஞர்கள் கலந்து கொள்ளவும், தமிழ்க் கருத்தரங்குகள் நடத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், சாஹிரா கல்லூரி, பாலிகா மகா வித்தியாலயம், மத்திய மகாவித்தியாலயம் என்பவற்றில் தமிழ் மொழிக் கருத்தரங்குகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடக் கொண்டாட்டங்களில் 2, 500 தமிழ் இளைஞர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 150 பேர் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வார்கள் என விழா அமைப்பாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த வருடத்தை விட இவ்வருடம் கடுமையான பொலீஸ் பாதுகாப்பு கொண்டாட்ட நாட்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இடைத்தேர்தல் நடத்தும் முடிவு கைவிடப்பட வேண்டும்

## மட்டக்களப்பு பிரசைகள் குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு மார்ச் 23

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருக்கும்போது சுதந்திரமான தேர்தல் நடத்த முடியாது. இந்நிலையில் இடைத்தேர்தல் நடத்த அரசு எடுத்துள்ள தீர்மானம் கைவிடப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் மட்டக்களப்பு பிரசைகள் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

திரு க. கணபதிப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

✶ யாழ் குடாநாட்டுக்கான எரிபொருள் தடை, பொருளாதாரத் தடை ஆகியவை உடனடியாக நீக்கப்பட வேண்டுமென ஜனாதிபதியைக் கோரல்.

✶ பெலவத்தை புனர்வாழ்வு முகாமிலுள்ள தீவிரவாதச் சந்தேக நபர்களை உறவினர் பார்வையிட அனுமதிக்கப்படவேண்டும்.

✶ குறிப்பிட்ட தினம் ஒன்றுவரை முகாம்களிலுள்ள தீவிரவாத சந்தேக நபர்களின் பெயர்களை வெளியிடுமாறு தேசிய பாதுகாப்பு அமைச்சரைக் கோரல்.

✶ காத்தான்குடியில் ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ... நஷ்டஈடு வழங்குமாறு அரச அதிபரைக் கோரல். (இ-21)


23 - 3 - 87

O/L Dec 87

DAY CLASSES

(முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்)

காலை 8-00 — பி. ப. 1-00

மார்ச் 25இல் ஆரம்பம்

கடந்த வருடப் பரீட்சைப் பெறுபேறுகளில் அதிக நூற்றுவீத பெறுபேறுகளைப் பெற்றெடுத்த ஓரே ஒரு நிறுவனம்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை — கோப்பாய்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தலைக்குப் பாதுகாப்பு தொப்பி. காலுக்குப் பாதுகாப்பு செருப்பு. வாழ்க்கைக்குப் பாதுகாப்பு ஒழுக்கம்.
— பேராசிரியர் வ. பெருமாள்

உதயன்
இல.15, ஆஸ்பத்திரி ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 23-03-1987 த.பெ.இல. 28

## யாழ். மக்களுக்குச் சபாஷ்!

எரிபொருள் கப்பல் பெறுவதற்கு குடாநாட்டில் எவருமே இராணுவ முகாம்களுக்குச் செல்லவில்லை!

காதில் தேன் போல இனிக்கும் செய்தி இது!!

தமிழன் தன்மானம் உள்ளவன். மன உறுதி நிறைந்தவன். தனது உரிமைப் போராட்டத்தில் இருந்து ஓர் அங்குலம் தானும் பின்வாங்க மாட்டான். அற்ப சொற்ப சலுகைகளைக் காட்டி அவனை ஏமாற்ற முடியாது. தனது மண்ணையும், இழந்த உரிமைகளையும் மீட்பதற்காக எந்தக் கஷ்டத்தையும் அனுபவிக்க அவன் தயாராகி விட்டான்.

எரிபொருள் கப்பல்களைப் பெறுவதற்குச் செல்லாமல் பகிஷ்கரித்ததின் மூலம் யாழ்ப்பாண மக்கள் முன்னுதாரணச் செயல் மூலம் நிலைநாட்டி விட்டார்கள்.

யாழ். குடாநாட்டில் இராணுவ ஆட்சிக்கு அத்திவாரம் இடுவதற்கு அரசு மேற்கொண்ட சூழ்ச்சியையும் அவர்கள் முறியடித்து விட்டார்கள். சபாஷ்! யாழ் மக்களே!!

வடபகுதி மக்களுக்கு எதிரான எரிபொருள் தடை என்பது நாட் பழைமை வாய்ந்து விட்டது. அதனை அமுல் செய்த புதிதில் பிரகடனப் படை தமிழர்களுக்கு எதிரான பொருளாதாரத் தடை அல்ல என்று அரசாங்கம் விதண்டா வாதம் புரிந்தது.

ஆனால் உலக நாடுகள் அந்தக் குதர்க்கத்தை ஏற்க மறுத்துவிட்டன. தமிழ் மக்களை ஸ்ரீலங்கா அரசு தனது மக்களாகக் கருதினால் பொருளாதாரத் தடை விதிக்கக்கூடாது. எரிபொருள் தடையும் அடிப்படை மனித உரிமை மீறல் தான். எனவே அதனை நீக்க வேண்டும். இவ்வாறு உலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தன.

அதேவேளை தமிழ் மக்களும் எரிபொருள் கஷ்டத்தை அனுபவிக்கத் தயாரானார்கள். பல மாற்று வழிகளைக் கைக்கொள்ளத் தொடங்கினர்.

இரண்டினதும் விளைவு: அரசாங்கத்துக்குப் பெரும் தோல்வியே ஆகும். விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுவதற்கு ஒப்ப, தடையை முற்றாக நீக்க மனம் இல்லாமல், எரிபொருள் தடையைத் தளர்த்தப் போவதாக அரசு அறிவித்தது.

எனினும் அப்போதும் நீசத் தன்மையே அதனிடம் மேலோங்கி நின்றது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குடாநாட்டில் இராணுவ ஆட்சிக்கு ஆரம்பப்புள்ளி வரைவதற்கு நினைத்தது அது.

எரிபொருள் அத்தியாவசிய பாவனைப் பொருள். அது தாராளமாக விநியோகிக்கப்பட வேண்டிய பாவனைப்பொருள். ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளில் எரிபொருள்கள் தாராளமாக விநியோகிக்கப்படும் வேளையில் குடாநாட்டில் அதற்குக் கப்பன் முறை கொண்டு வருவது பாரபட்சமான நடவடிக்கை. வடக்கு மக்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்குவது.

அதற்கும் மேலாக எரிபொருள் விநியோகத்தை சிவில் நிர்வாகத்திடம் இருந்து பறித்து இராணுவத்திடம் கையளிப்பது இங்கு இராணுவ நிர்வாகத்தைக் கொண்டுவரும் துணிகர முயற்சி பெரும் அடாத்தானதாகும்.

எனவே, எந்த வகையால் நோக்கினும் அரசின் எரிபொருள் விநியோக முறையை ஏற்பது சரணாகதிக்கு ஒப்பானது. குடாநாட்டு மக்களே இராணுவ ஆட்சிக்கு உடந்தையானதாகவும் முடியும்.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இனப்பிரச்சினை விவகாரம் — தமிழர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவது — பற்றிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்போதுதான் தமிழர் பிரச்சினை உத்தியோக ரீதியாக சர்வதேசமயப்பட ஆரம்பித்துள்ளது.

அதனை மையமாக வைத்து தமிழர் பிரச்சினையை சர்வதேசமயமாக்கும் ஏற்பாடுகளை வலுவாக்கி விரிவாக்க வேண்டும்.

குடாநாட்டு மக்களை இராணுவ ஆட்சிக்கு உடந்தையாக்கும் அரசின் சதிக்கு நாம் சாய்ந்து— சரிந்து போவோமானால் எமது பிரச்சினை சர்வதேசமயப்பட்டு வருவதை நாமே கெடுப்பதாக முடியும். எமது தலையில் நாமே மண்ணை அள்ளிக் கொட்டியவர்களும் ஆவோம்.

ஆகவே, அரசின் புதிய எரிபொருள் விநியோக முறையை பகிஷ்கரிப்பதோடு மட்டுமன்றி, எரிபொருள் தடை தொடர்ந்து அமுலில் இருக்கிறது என்பதையும் உலகுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

அதன் பொருட்டு அரசு அடக்குமுறையை எதிர்த்து, ஊர்வலங்கள், உண்ணாவிரதம் என்பன நடத்தப்பட வேண்டும். தமிழர்களை மட்டுமன்றி ஸ்ரீலங்கா அரசு உலகத்தையும் ஏமாற்றப் பார்க்கிறது என்பது எடுத்துக் காட்டப்பட வேண்டும்.

அந்த வகையில் நேற்று நடந்த எரிபொருள் தடை எதிர்ப்பு ஊர்வலம் ஆரம்பமாக அமைந்தது பாராட்டுக்குரியது. எரிபொருள் தடை முற்றாக நீக்கப்பட்டு, சிவில் நிர்வாகத்தின் கீழ் தாராளமாக விநியோகிக்கப்படும் வரை எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர வேண்டும்.

### ருமேனியா அறிவிப்பு

புக்காரெஸ்ட், மார்ச் 22

போர்க்குடாப் பகுதிக்குள் அணு ஆயுதங்களோ இரசாயன பரிசோதனைகளோ அல்லது வெளிநாட்டு ராணுவத் தளையீடுகளோ அற்ற சமாதான ஒத்துழைப்பு வலயமாக மாற்றுவதற்கு ருமேனியா உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு ருமேனிய ஜனாதிபதி நிக்கலாய் சசிக்கோ தெரிவித்தார்.

இத்தகைய சமாதான வலயங்கள் உலகின் ஏனைய பகுதிகளில் ஏற்படுத்தப்படுவதை ருமேனியா வரவேற்கும். ஐரோப்பாவிலிருந்து நடுத்தர ஏவுகணைகளை அகற்றுவதற்கு இரு வல்லரசு நாடுகளும் உடன்படிக்கை செய்து கொள்வது அவசியமானதாகும். (ஒ)

# தாய்லாந்தில் போர் அபாயம்!

## வியட்நாம் வெளியேறு விடின் வல்லரசின் உதவி பெற முடிவு

பாங்கொக், மார்ச் 22

கிழக்குத் தாய்லாந்துப் பகுதியில் யுத்த மேகம் சூழும் ஆபத்து உருவாகி வருகின்றது.

தாய்லாந்தின் கிழக்குப் பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்து முற்றுகை நடத்திவரும் நாற்பதுக்கும் அதிகமான வியட்நாமிய துருப்புக்கள் விரைவில் வெளியேற வேண்டும்.

இக்கிலேயே வல்லரசு நாடு ஒன்றின் உதவியுடன், நவீன ரக ஆயுதங்களைப் பாவித்து அவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள்.

–இவ்வாறு தாய்லாந்து இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாத நடுப்பகுதியில் அத்துமீறிக் குடியேறிய இவர்கள் தற்பொழுது மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை நோக்கி பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதனை உடனடியாக நிறுத்துவதற்கு இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டியது தாய்லாந்தின் பாதுகாப்புக்கு அவசியமாகி உள்ளது.

–இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த எச்சரிக்கைக்கு வியட்நாம் எவ்விதமான பதிலும் அறிவிக்காது மௌனம் சாதித்து வருகிறது. (ஒ)

### சீனு ஆராயாது

பீகிங், மார்ச் 22

சீனாவின் முக்கியமான சட்ட மூலமொன்று தேசிய மக்கள் காங்கிரஸின் அடுத்த வாரம் ஆராயப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றிய இச் சட்டமூலம் கம்பனி முகாமையாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலையீடுகளின்றி நிர்வாகத்தை நடத்துவதற்கு கூடுதலான அதிகாரம் வழங்கும்படியாக அமைந்திருந்தது. (ஒ)

### சிங்கப்பூர் கருத்து

சிங்கப்பூர், மார்ச் 22

சிங்கப்பூர் பத்திரிகைச் சுதந்திரம்பற்றி அமெரிக்கா கருத்துத் தெரிவிக்க வேண்டியது அவசியமில்லை.

இவ்வாறு சிங்கப்பூர் வெளிநாட்டு அமைச்சர் சுப்பையா தனபாலன் தெரிவித்தார்.

அமெரிக்க சஞ்சிகை ஒன்றின் விற்பனையை 5 ஆயிரம் பிரதிகளிலிருந்து 400 பிரதிகளாக கடந்த வாரம் சிங்கப்பூர் அரசு குறைத்திருந்தது.

இதனை அமெரிக்கா ஆட்சேபித்த பொழுதே சுப்பையா தனபாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஒ)

### துருக்கி விஜயம்

அங்காரா, மார்ச் 22

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கெஸ்பர் வைன்பேர்கர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தைத் துருக்கியில் முடித்துள்ளார்.

துருக்கிக்கு அமெரிக்க ராணுவ உதவி பற்றி இந்த விஜயத்தின்போது முக்கியமாக ஆராயப்பட்டது. (ஒ)

# சாட் மீது லிபியா கடும் தாக்குதல்

## பலத்த சேதம் என அறிவிப்பு

திரிபோலி, மார்ச் 22

சாட் மீது லிபியாவின் போர் விமானங்கள் மூர்க்கத்தனமாக தாக்குதல்களை நடத்தியுள்ளன.

சனிக்கிழமை அதிகாலை சுமார் ஐம்பதிற்கும் அதிகமான லிபிய போர் விமானங்கள் சாட்நகரின் வட பகுதியை குண்டு வீசித் தாக்கியதில் பல கட்டடங்கள் தரைமட்டமாகின. ஐநூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் சாட் படைகள் நடத்திய தாக்குதலில் ஏற்கனவே லிபியாவிடம் இழந்த பல பகுதிகளை சாட் மீண்டும் தன்வசப்படுத்தியது.

இதற்குப் பதில் தாக்குதல் நடவடிக்கையாகவே லிபியா சனிக்கிழமை குண்டு வீசியது என லிபிய வானொலி தெரிவித்தது.

இதே சமயம் இருநாடுகளுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க முயன்று வரும் சூடானிய அரசியல் பிரமுகர்களுக்கு இத்தாக்குதல்கள் அதிருப்தியை அளித்துள்ளதாகவும் லிபியா தெரிவித்தது. (ஒ)

மத்தியதரைக் கடல்தீவில்

## அரை மணி நேரத்தில் 50 குண்டுகள் வெடிப்பு

பாரிஸ், மார்ச் 22

பிரஞ்சு மத்தியதரைக் கடல்தீவான கோர்சிக்காவில் பிராந்திய தேர்தல்களுக்கு முன்னதாக நேற்று 50க்கும் அதிகமான குண்டுத் தாக்குதல்கள் நடந்து பல கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

பிரான்ஸுக்குச்சொந்தமான பல வங்கிகளும் தபால் அலுவலகங்களும் தாக்கப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

காலை 4 மணி முதல் அரைமணி நேரத்தினுள் சகல குண்டுகளும் வெடித்து முடிந்தன.

இத்தாக்குதல்களுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. (ஒ)

**வெளி உலகில்**

இந்தியாவில்

## மூன்று மாநிலங்களில் இன்று தேர்தல்

புதுடில்லி, மார்ச் 23

மேற்கு வங்காளம், கேரளம், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைக்கான தேர்தல்கள் இன்று திங்கட்கிழமை நடைபெறுகின்றன.

இந்த மாநிலங்களில் உள்ள 506 தொகுதிகளில் மூவாயிரத்து இருநூறுக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மேற்கு வங்கத்தில் 294 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், கேரளத்தில் 138 தொகுதிகளுக்கும் ஜம்மு காஷ்மீரில் 74 இடங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறுகின்றன. (ஒ)

**செய்திக்கொத்து**

### ஷெல் தாக்குதல் நாளாந்த சம்பவம்

சாவகச்சேரி, மார்ச் 23

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து ஷெல் அடிக்கப்படுவது நாளாந்த சம்பவமாகி விட்டது.

இதனால் கைதடிப் பகுதி மக்கள் பெரும் பீதிக்குள்ளாகி குடியிருக்கும் வீடுகளை விட்டு பகலில் வெளியேறுவதும் இரவில் திரும்புவதுமாக இருக்கிறார்கள். (இ-31)

### வரட்சி நிவாரணம்

கொழும்பு, மார்ச் 23

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 12 மாவட்டங்களில் வாழும் சுமார் 20 லட்சம் மக்களுக்கு நிவாரணம் வழங்க ஒரு கோடி டாலர் தேவைப்படுவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இன்னும் 6 மாதங்களில் இப்பணம் வெளிநாடுகளில் திரட்டியாக வேண்டும் என்று இலங்கை அரசு தனது வெளிநாட்டுத் தூதர்களுக்கு அவசர பணிப்புரை வழங்கியது. (இ-எ)

### போராளி நினைவாக பஸ்தரிப்பு

இளவாலை, மார்ச் 23

தமிழீழப் புலிகள் இயக்க வீரன் செல்வன் வெள்ளை ஆனந்தன் பலாலி முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்துடன் போராடி வீர மரணம் அடைந்ததின் நினைவாக இளவாலைப் பெரிய சந்தியில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மடத்தியாலய அதிபர் அருட்செல்வி விக்டரின், வட்டுக்கோட்டை விடுதலைப் புலி இயக்கத் தலைவர் திரு. பிரசாத், ஆசிரியர் திரு. சூசைநாதர், அருட்திரு பற்றிக் அடிகள், ஆசிரியர் செ இராசநாயகம் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர். (இ-48)

### கண்டனக் கூட்டங்கள்

சுன்னாகம், மார்ச் 23

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் வலி-தெற்கு பிரிவினர் எரிபொருள் தடையைக் கண்டித்தும் அரச படைகளின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும் கிராமம் கிராமமாக எதிர்ப்பியக்கங்களையும் கண்டனக் கூட்டங்களையும் நடத்துகின்றனர்.

குழுவின் செயலாளர் திரு. வி. எம். குகராஜா இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார். (இ-27)

### சித்திரப்போட்டி

மானிப்பாய், மார்ச் 23

ஸ்ரீலங்கா தேசிய ஒலிம்பிக் குழுவின் பொன் விழாவையொட்டி சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி ஒன்றினை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சித்திரப் போட்டியில் 12 வயது– 15 வயதுக்கு உட்பட்ட பாடசாலைச் சிறுர்கள் பங்குபெறலாம்.

கல்வி மாவட்டங்கள் ரீதியில் நடைபெறும் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (உ-90)

### கால்நடை நோய் தடுப்பு ஊசி

யாழ்ப்பாணம், மார்ச் 23

புங்குடுதீவு 5 ஆம் 6 ஆம் வட்டாரத்திலுள்ள நூற்றுக் கணக்கான கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

இறுப்பிட்டி கலைவாணி சனசமூக நிலையப் பொதுச் செயலாளர் திரு. கார்த்திக் திருநாவுக்கரசு எடுத்த பெரு முயற்சி காரணமாகவே தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

வேலணை உதவி மிருக வைத்தியர் திரு. சி. பி. சுந்தரன் தலைமையில் ஊசி போடும் வேலைகள் நடைபெற்றன. (இ-10)

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் புதிய நிலைப்பாடு

## 'இந்து' நாளிதழின் தலையங்கம்

ஒருமைப்பாடு, மனிதாபிமானம் ஆகிய அம்சங்களின் வழி நடத்தலின் கீழ் முன்னுரிமையுடன் கூடிய செயல் திட்டம் ஒன்றை புதுடில்லி அரசு வகுத்ததன் மூலம், இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒன்றை தெளிவாக எடுத்துக் காட்டி விட்டது.

தமிழருக்கு எதிரான கொடூர இராணுவ நடவடிக்கை காரணமாக

> 'இலங்கை: இந்தியா தீர்க்கமாகச் செயல்பட வேண்டும்'— என்ற தலைப்பில் 'இந்து' ஆங்கில நாளிதழ் மார்ச் 11 பதிப்பில் எழுதிய பிரதான ஆசிரியர் தலையங்கத்தின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

இந்தியா தனது மத்தியஸ்தப் பணியை விலக்கிக் கொண்டது. இதனால் அரசியல் வழி இன்றைய சூழ்நிலையில் பொருத்தமற்றதொன்றாகி விட்டது

இதன் அர்த்தம் இந்தியாவும் அதன் அரசும் அதன் மக்களும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதிகாரமற்ற நிலையில் இருக்கின்றார்கள் என்பது அல்ல; அத்துடன் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளையும் போராட்டத்தையும் ஜெயவர்த்தனாவும் அத்துலத்முதலிக்களாலும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க அனுமதிப்பது என்பதும் அல்ல.

சில வாரங்களுக்கு முன்னர் இப்படியான முடிவு, வெளிப்படையாகத் தெரியவில்லை.

ஆனால் இன்று ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நிலைப்பாடும் செயல்பாடும் வரவேற்கப்பட வேண்டியவை,

இலங்கை அரசை ஒரு புறமாகவும், தமிழரை இன்னொரு புறமாகவும் வைத்து எடுக்கப்பட்டுள்ள புதிய நிலைப்பாடு கருத்துள்ளதாக அமைய ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

வழமைக்கு மாறானதான— மனிதப் பிரச்சினையாக— உள்ளது இலங்கைத் தமிழரின் துன்பம்,

இந்தியாவின் அளவு, புவியியல் அரசியலில் இந்தியா இருக்கும் இடம் மற்றும் இந்தியாவின் கேந்திர, ஜனநாயக வளங்கள் ஆகியவையைக் கருத்தில் கொண்டால் இலங்கைத் தமிழர் பிரச்சினை தனது பிரச்சினை அல்ல என்ற நிலைப்பாட்டை இந்தியா எடுக்க முடியாது.

1983 ஜூலையில் இலங்கையில் ஏற்பட்ட துக்ககரமான நிலை, இலங்கை இனப்பிரச்சினை ஆகியவை இந்தியாவை வெகுவாகப் பாதித்து விட்டது.

அதன் பின்னர் இலங்கைக்குள் நுழைந்த – இந்தியாவுக்கு எதிரான வெளிநாட்டுச் சக்திகள்– இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு எதிராக இராணுவ ரீதியில் செயல்படுகின்றன.

திடமான முறையில் ஒற்றுமையைத் தெரிவிப்பது, கேந்திர ரீதியிலான அக்கறையைக் காட்டுவது சம்பந்தமாக எடுக்கப்படும் ஆரம்ப நடவடிக்கைகளின் தன்மை ஆகியவை தெளிவாகத் தெரியாமல் உள்ளது:

இது மனிதாபிமான ரீதியிலான தம் கொள்கை வகுப்பதில் உள்ள நம்பாத் தன்மையிலும் பெருத்த இழப்பைக் காட்டுகின்றது

வேறு வார்த்தையில் சொல்வதானால் ஏற்கனவே இழந்து போன நேரத்தையும் சந்தர்ப்பத்தையும் புத்திசாலித்தனமாகவும் தீர்க்கமாகவும் அவசரமாகவும் நாம் ஈடுசெய்ய வேண்டும்.

பொருளாதார, தொலைத் தொடர்பு சாதனத் தடைகளினால் உளரீதியான தாக்கங்களுக்கு ஆளாகி இலங்கைத் தமிழர் ஒதுக்கப்பட்ட பிரிவினராக வாழ்கின்றனர்

இவர்கள் மீது இனக் கொலைப் பயமுறுத்தல் ஆபத்து இன்னும் இருக்கிறது

ஜனவரி 28 இல் இருந்து இலங்கை அரசு மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கைகளினால் 550 அப்பாவித் தமிழர் உயிரிழந்தனர்.

இதனால் தமிழர்— சிங்களவரின் எதிர்கால உறவுமட்டுமல்ல, இலங்கையின் ஒற்றுமையும் அதைப் பேணுவதும்

(4ஆம் பக்கம் பார்க்க)

**வாசகர் நெஞ்சகம்**

## அடகு வைத்தோர் போராட்டத்தால் பாதிப்பு யாருக்கு?

அடகு வைத்தோர் சங்கத்தின் தீர்மானம் பற்றிய செய்தி ஒன்று 17 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியாகியது.

இது சம்பந்தமாகச் சில கருத்துக்களை இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் ஏனையோருக்கும் தெரிவிப்பது அவசியம் என எண்ணுகின்றேன்.

அடகு வைத்தோரின் மறியல் போராட்டத்தினால் பாதிக்கப்படுவோரில் ஒரு பகுதியினர் ஒய்வூதியம் பெறுவோராவர்.

ஒய்வூதியம் பெறுவோர் தாம் பெறும் ஒய்வூதியத்தை வங்கியிலோ வேறு சேமிப்புகளிலோ இட்டு வைப்பதற்காகப் பெறுவதில்லை. இவர்கள் மாதாந்த சீவியத்துக்கு ஒய்வூதியத்தையே நம்பி இருக்கின்றனர்.

இவர்களின் நிலை இவ்வாறு இருக்க அடகு வைத்தோரும் தங்கள் போராட்டத்தை ஒய்வூதியம் வழங்கப்படும் நாட்களுக்கு அண்மித்த காலங்களிலேதான் ஆரம்பிக்கின்றனர்.

இதனால் ஒய்வூதியம் பெறுவோர் தமது ஒய்வூதியத்தை உரிய காலத்திலே பெற முடியாமல் காத்திருந்து கஷ்டப்படுகின்றனர்.

1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குரிய ஒய்வூதியத்தை இன்னும் பெற்றுக்கொள்ளாதவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதை அதிகாரிகள் உட்பட இதிலே சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் உணராமல் இருப்பது வேதனையைத் தருகின்றது.

மறியல் போராட்ட ஆரம்பதினங்கள் வருமாறு:—

1986 டிசம்பர் 18 இல் மக்கள் வங்கியின் முன்.

1987 பெப்ரவரி 23 இல் மக்கள் வங்கி கச்சேரி ஆகியவற்றின் முன்.

1987 மார்ச்சில் உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி 23-3-87

உத்தேசிக்கப்பட்ட வண்ணம் 23-3-87இல் மறியல் ஆரம்பமாகுமானால் 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குரிய ஒய்வூதியத்தையும் பெற முடியாமல் போகலாம்.

ஆதலால் ஒய்வூதியம் பெறுவோரையும் மனித இனத்தவர்தான் என்றும்; உண்ணவும் வாழவும் வேண்டியவர்கள் என்றும் சிந்தித்துச் செயலாற்றுமாறு இதிலே சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டுகிறேன்.

—செ. மயில்வாகனம்
திருநெல்வேலி மேற்கு.

**பொய்யாமொழி**



குறள்:

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

பொருள்:

ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள் வழுக்கும் நிலத்தில் ஊன்றுகோல் போல வாழ்க்கையில் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரு டியூசன் சென்ரர்
கோண்டாவில்.
O/L DAY CLASS பிரிவு 2
(பகல் முழு நேரம்)
காலை 8-00 முதல் 1-30 வரை
(முற்றிலும் பாடசாலை வசதி போன்றவை)
ஆரம்பம் 23-03-87.

# உதயன்

23 - 03 - 1987 திங்கட்கிழமை

Niru Tuition Centre
KONDAVIL.
A/L 89
கலை, வர்த்தக விஞ்ஞானம்
வகுப்புக்கள்
(தனித்துவம் மிக்க ஆசிரியர்கள்)
ஆரம்பம்: 21-3-87
காலை 7-00 மணி

தனிமாகாணக் கோரிக்கை முஸ்லிம்களுக்குத் தீங்கு

# டிசம்பர் 19 யோசனையின் அடிப்படையிலே தீர்வு

## முஸ்லிம் கவுன்ஸில் உறுப்பினர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 23

முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் ஏற்படுத்துவது பாரிய தீங்குகளை சமூகத்துக்குக் கொண்டு வரும். டிசம்பர் 19 ஆம் திகதிய யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமாயின் நாட்டைஅது எதிர் நோக்கியுள்ள பேராபத்திலிருந்து நிச்சயம் காப்பாற்ற முடியும்.

-இப்படி மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் நிருவாகக் குழு உறுப்பினரான ஜனாப. எம்.ரீ.எம். அஹுஹறுத்தீன்.

முஸ்லிம்களுக்கு தனி மாகாணமொன்று வேண்டுமென்ற முஸ்லிம் கவுன்ஸிலின் தீர்மானம் பொதுச்சபை முன் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்படாதவரை அத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட வேண்டிய கடப்பாடு தனக்கு இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கான தனிமாகாணம் பாதகமானது எனவும் டிசம்பர் 16ஆம் திகதிய அரசின் யோசனைகளை வரவேற்றும் "இடைக்கால இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை குழுவின்" சார்பில் ஜனாப். எம் ரி எம். அஹுஹறுத்தீன் விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் செயலாளர் நாயகம் ஜனாப். ஏ அஸீஸ் அவரிடம் விளக்கம்கோரியுள்ளார்.

ஜனாப். அஹுஹறுத்தீன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் நிருவாகக்குழுவின் அவசரக் கூட்டமொன்றைஜனாப். அஸீஸ் கூட்டியுள்ளார்.

தம்மிடம் கோரப்பட்ட விளக்கத்திற்கு பதில் அனுப்பியுள்ள ஜனாப். அஹுஹறுத்தீன் நாட்டின் முழு முஸ்லிம் சமுதாயத்தையும் பாதிக்கும்விடயத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் பொறுப்பு ஒரு சிலரின் பிரத்தியேக உரிமையல்ல எனத் தனது பதிலில் தெரிவித்துள்ளார். (உ)

## பாகிஸ்தான் வெற்றி

புதுடில்லி, மார்ச் 23

இந்தியாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற நான்காவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் வென்றது.

# கிளிநொச்சியில் ஜீ.சி.ஈ. பெறுபேறுகளை பெறக்கூடிய விவரம்

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு கிளிநொச்சி பகுதியிலிருந்து தோற்றிய தனிபட்ட பரீட்சார்த்திகள் பின்வரும் இடங்களில் தமது பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் அறிவித்திருக்கிறார்.

கிளிநொச்சி, ஆனையிறவு முகவரியுடையவர்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திலும்.

பரந்தன் முகவரியுடையவர்கள் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திலும்,

உருத்திரபுரம் முகவரியுடையவர்கள் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்திலும்.

பளை கிலாசமுடையவர்கள் பளை மகாவித்தியாலயத்திலும்

இயக்கச்சி முகவரியுடையவர்கள் இயக்கச்சி மகாவித்தியாலயத்திலும்

வட்டக்கச்சி, இராமநாதபுரம் முகவரியுடையவர்கள் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும்

முரசுமோட்டை, கண்டாவளை, தர்மபுரம் முகவரியுடையவர்கள் முரசுமோட்டை மகாவித்தியாலயத்திலும்.

பூநகரி, பல்லவராயன்கட்டு முகவரியுடையவர்கள், பூநகரி மகாவித்தியாலயத்திலும் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெறுபேறுகளைப் பெற தமது அடையாள அட்டைகளையும் கொண்டு வரவேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

லண்டன் தடுப்பு முகாமிலிருந்து

# 64 தமிழ் அகதிகளில் அரைவாசிப் பேர் விடுவிக்கப்பட்டனர்

லண்டன், மார்ச் 23

லண்டனில் கடந்த மாதம் முதல் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 64 இலங்கைத் தமிழ் அகதிகளில் அரைவாசிப்பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுவிக்கப் பட்டோர் லண்டனில் உள்ள தமது உறவினர்கள், நண்பர்களுடன் தங்கி இருக்க பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரிகள் அனுமதி வழங்கினர்.

இந்த இலங்கைத் தமிழ் அகதிகள் பங்களாதேஷில் இருந்து விமானம் மூலம் லண்டன் போய் கடந்த மாதம் இறங்கினர்.

பின்னர் அவர்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் திருப்பி அனுப்ப முயற்சித்ததும்- நீதிமன்றம் ஒன்றின் உத்தரவைத் தொடர்ந்து அவர்கள் தடுப்பு முகாம் ஒன்றில் பின்னர் தடுத்து வைக்கப்பட்டதும்தெரிந்ததே.

இதனிடையில் இவர்களின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை குடியகல்வு ஆலோசனைச் சபையின் பரிசிலனைக்காக பிரிட்டிஷ் அரசு அனுப்பிவைத்துள்ளது.

தற்போது இவ் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுவருகின்றன.

இந்தச்சமயத்தில்தான் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை தமிழ் அகதிகளில் அரைவாசிப்பேரை தடுப்பு முகாமில் இருந்து பிரிட்டிஷ் அதிகாரிகள் விடுவித்துள்ளனர். இப்படி விடுதலை செய்துள்ளதை கன்சர்வேடிவ் கட்சி எம். பி. ஒருவர் கண்டித்தார்.

இந்தத் தமிழர்கள் உண்மையான அகதிகள் அல்லர் விடுதலை செய்யப்பட்ட இவர்கள் மாயமாய் மறைந்துவிடுவார்கள்; பின்னர் கண்டு பிடிக்கவே முடியாது"- என்று அந்த எம் பி. தெரிவித்தார். (உ-எ)

## அப்பாவி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தகஸ்தாபனங்கள் வீடுகள், யாழ் ஆஸ்பத்திரி உட்பட பலகட்டடங்கள் சேதமுற்றன.

நகரின் பலஇடங்களில் விழுந்த ஷெல் குண்டுகள் பல வெடிக்காத நிலையில் போராளிகளினால் மீட்கப்பட்டிருக்கின்றன.

ஷெல் குண்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த 50 பேர் யாழ் ஆஸ்பத்திரியில நேற்று அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இரண்டுபேர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர் (உ-எ-10)

## தற்காப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும்.

மீண்டும் பணயக் கைதிகள் பரிமாற்றத்துக்கு அரசு சம்மதிக்குமாகில் நாமும் அதற்குத் தயாராக உள்ளோம் எனினும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த பரிமாற்றம் நடைபெறும்.

இவ்வாறு கிட்டு மேலும் கூறினார். (உ-எ-10)

## விசித்திரம்

முரளியாரே? சரி வாரும்! என்ன ஒரு சிரிப்போடை வாறீர்?

ஒருத்தரும்எரிபொருள் கூப்பன் வாங்கப் போகயில்லை எண்டது சந்தோஷமான காரியம் எண்டதால உனக்கும் மகிழ்ச்சியோ!

உது எல்லாரும் சந்தோஷப்படவேண்டிய விஷயம்தான், தட்டித் தவறி, ஒருத்தர் இரண்டு பேராவது போயிருந்தால அவர் அச்சாணியாருக்குக் கால் நிலத்திலை நிண்டிருக்காது. வானத்திலைதான் பறந்துகொண்டிருப்பார்.

ஏன தெரியுமே? யாழ்ப்பாணத்திலை இராணுவ ஆட்சிக்கு அத்திவாரம் போட்டாச்சு எண்ட புழுகத்திலை இருப்புக்கொள்ளாமல் ஓடித்திரிஞ்சிருப்பார்.

பாப பாவம் அவருக்கு நாடி விழுந்திருக்கும். எண்டாலும் இன்னும் ஒருபடி எப்பிடி உயரப் பாயலாம் எண்டு அவர் யோசிச்சுக்கொண்டுதான் இருப்பார்.

முந்தி முந்தியும் யாழ்ப்பாணத் தமிழரை மடக்கிறதுக்கு எண்டு உவர் கொண்டுவந்த திட்டம் எல்லாம தவிடுபொடியானது. இந்தக் முறையும் அம்புதான்.

பாக்கயில்லையே, இந்தியா சொன்னது எவ்வளவு சரியெண்டு! டிசம்பர் 19 யோசனையை இன்வாற பேச்சுக்கு அடிப்படையாக எடுக்கிறது எண்டு இலங்கை திட்டவட்டமாக உறுதி தந்தாலதான் மேற் கொண்டு எதையும் செய்யலாம் எண்டு சொன்னது மெத்தச் சரியாய்ப் போச்சு.

இலங்கை கபினெற் நிலைமை தெரியாதவை தான் டிச. 19 யோசனையைத் தயாரிச்சவை. நாங்கள் இன்னும் அதுக்கு ஒப்பு கேட்டவும போகயில்லை எண்டு அச்சாணியார் சொல்லியிருக்கிறார்.

உவர் எப்பவும் குருவுக்கு மிஞ்சிய சீடன் தாமனே. தேனெடுக்கிடடை அவர் உத்தமர் ஏதோ சாதகமாய்ப் பேசியதாய்ச் சொல்லினம். உவர் சீடர் அடுத்த பக்கத்தால சொதப்பி போடுறார்.

உவை படைக்காரர் தாங்கள் தங்கடை கடமையைத்தான் செய்யிறதாக பயணிகளிட்டைப் பிரசுரம் குடுக்கினம்.

அதே வேளை, அரசாங்கம் தேவையில்லாமல் பாதுகாப்புக்குப் பெருந்தொகையை செலவழிப்பதாய் எல்லா மந்திரிமாரும் கவலைப்படுகினம். கடைசியாய் காமினியும் அந்த நிலைக்கு வந்திட்டார். ஆனால், சிலபேருக்கு பாதுகாப்புக்குப் பல மடங்கு செலவழிக்கிறது பெரு விருப்பமாம். அதுக்கும் தக்க காரணங்கள் இருப்பதாய்ச் சொல்லுகினம். நிச்சயமாய் அது சரியாய் இருக்கும்.

★ ★ ★

இலங்கைத் தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை, காஞ்சி காமகோடி பீடத்து மூத்த சுவாமியான ஜகத்குரு பரமாசார்ய ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமி விசாரித்து அறிந்தார் என்று ஒரு தகவல் கிடைத்திருக்கிறது.

அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அண்மையில் தென்னிந்திய ஸ்தல யாத்திரை சென்றிருந்தார்.

அப்போது அவர் மூத்த சுவாமிகளைத் தரிசித்தார். தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை ஒரு மணி நேரம ஆற அமர இருந்து சுவாமிகள் கேட்டறிந்தார் என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னார்.

நல்லூர் திருஞானசம்பந்த ஆதீனம பற்றியும் அதன் சேவைகள் குறித்தும மூத்த சுவாமிகள் கேட்டறிந்தாராம்.

மகான்களின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு தமிழர் பிரச்சினை வந்துவிட்டதால் விரைவில் அமைதி வரும் என்று எதிர்பார்ப்போமாக.

தென்னோடி

## எம். ஜி. ஆர்...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

அமைத்து தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை நடத்துவது—

கூட்டணி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால இந்திரா காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவது—

இத்திட்டத்தை திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஏற்றுக்கொண்டால் அவரை ஜனாதிபதியாக்குவது.

இப்படி இந்திரா காங்கிரஸ் திட்டமிட்டுச் செயல்படுகிறது.

அ. தி. மு. க இதனை ஏற்குமோ என்பது தெரியவில்லை.

அ. தி. மு. க இந்தத் திட்டத்தை ஏற்காவிட்டால் அதனுடனான உறவுகளை முறித்துக் கொண்டு தி. மு. க வுடன் கூட்டுச்சேருவது பற்றியும் இந்திரா காங்கிரஸின் தமிழ் நாடு வட்டாரங்கள் சிந்தித்து வருவதாகத் தெரியவருகிறது. (உ-எ)

# யாழ்நகரிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

இன்று அதிகாலைமுதல் பெரும் எண்ணிக்கையான மக்கள் யாழ் நகரிலிருந்து சாரசாரியாக வெளியேறி வருகின்றனர்.

மூடை முடிச்சுகளுடன் பொதுமக்கள் பலர் வீடுகளை விட்டு வெளியேறி, நகரை விலகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுகொண்டிருந்ததை வீதிகளில் காண முடிந்தது.

இன்று அதிகாலைமுதல் 7 மணிவரை சுமார் 6 மணிநேரம் படையினர் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல், செசம்பர், ஹெலிக்கொப்டர் தாக்குதல் ஆகியவற்றினால் பீதியடைந்த மக்கள் நகரை விட்டு வெளியேறி வருகிறார்கள்.

அடுத்து என்ன நிகழுமோ என்ற பயம் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது. (உ)

# அடையாளம் காண அகதிகளை அனுப்புங்கள்

## இலங்கையின் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23

பிரிட்டனில் புகலிடம் கோரியுள்ள 64 இலங்கைத் தமிழரும் உண்மையான அகதிகளா?

இதனை அடையாளம் காணத் தன்னை அனுமதிக்கும் படி இலங்கை அரசு புதுவிதமான கோரிக்கை விடுத்து உள்ளது.

லண்டனில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 64 இலங்கைத் தமிழரையும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாவலுடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைத்தால் அவர்கள் போலி அகதிகள் என்பதை இலங்கை அரசு நிரூபிக்கும்.

- இப்படி வெகுஜன தொடர்பு நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

## வங்கி சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் மாவட்டக் காரியாலயம் இன்றைய ஷெல் தாக்குதல்களினால் பலத்த சேதமுற்றுள்ளது. (உ)

## உயிரிழந்த இருவர்

யாழ்ப்பாணம் மார்ச் 23

தர்மலிங்கம் (60 வயது), நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ரவி (21 வயது) ஆகிய இருவருமே நேற்றைய ஷெல் தாக்குதலின் போது உயிரிழந்தவர்களாவர். (உ)

## இலங்கை..,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இருள் சூழ்ந்த ஒன்றாக உள்ளது

இப்படி மோசமடைந்து உள்ள நிலையில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை இந்திய அரசு பகிரங்கமாகச் சொல்ல வேண்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இவற்றுள் இல் சிலவற்றை வெளிப்படையாகச் சொல்ல வேண்டி உள்ளது.

(தொடரும்)

# நாவற்குழியில் நேற்றும் ஹெலித் தாக்குதல்கள்

## சிங்களச் சாரதி வேட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 23

நாவற்குழிப் பகுதியில் நேற்றும் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் சிங்களவரான, லொறிச் சாரதி ஒருவர் மரணமானார்.

நேற்றுக் காலை பலாலிப் பக்கமாக இருந்து வந்த மூன்று ஹெலிக்கொப்டர்கள் இந்தப் பகுதியில் கடும் தாக்குதல் நடத்தின.

ஒரு ஹெலிக்கொப்டர் நாவற்குழி முகாமில் இறங்கிச் சென்றது

ஹெலிக்கொப்டரில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

நீர்வேலி, கோப்பாய், பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஒருவர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

டபிள்யூ ஏ டீ. பட்ரிக் (40 வயது) என்ற மாத்தறை வாசியே காயமடைந்தவராவர்.

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று மாலையில் அங்கு மரணமானார்.

தனிப்பட்ட லொறிப் போக்குவரத்துக் ஸ்தாபனம் ஒன்றின் கொழும்பு-யாழ் சேவையில் டிரைவராகக் கடமையாற்றி வந்த பட்ரிக் நேற்று கோப்பாயில் உள்ள சேர்விஸ் நிலையத்தில் லொறியை நிற்பாட்டியிருந்த போது ஹெலித் தாக்குதலுக்கு இலக்கானார்

அவரது தோள் மூட்டைத் துளைத்துச் சென்ற சன்னம் ஒன்று. ஈரல், மண்ணீரல், சிறு நீரகம் ஆகியவற்றைச் சேதப்படுத்தியிருந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10 7)

## நகரில் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டனர்.

எரிபொருள் தடை காரணமாக குடா நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டநிலையை எடுத்துக்காட்டும் முகமாக மாட்டு வண்டிகளும் ஊர்வலத்தில் சென்றன

மாட்டு வண்டிகளில் ஒலிபெருக்கிகள் பூட்டப்பட்டு அவை முன்வே செல்ல அதனையடுத்து ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் சுலோக அட்டைகளை ஏந்தியபடியும், கோஷங்களை எழுப்பியபடியும் பின்னால் சென்றனர்.

ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்ட சுலோக அட்டைகளில் சில:-

"ஸ்ரீலங்காவில் சிவில் நிர்வாகம், தமிழீழத்தில் இராணுவ நிர்வாகமா?"

"தெற்கில் பொருளாதார வளர்ச்சி; வடக்கில் பொருளாதாரத் தடை!"

"எரிபொருள் தடையை நீக்கு! ஏழை மக்களை வாழவிடு!

"இராணுவ நிர்வாகத்தில் எரிபொருள் விநியோகம்—அப்பாவி மக்களைக் கொன்றுகுவிக்கவே!"

"இனவெறி அரசு கூட்டுப்பேச்சு; தமிழீழத்தில் குண்டு வீச்சு!"

"இங்கு எரிபொருள் எரியவில்லை; மக்களின் வயிறு எரிகிறது"

[illegible] உரிமையை, [illegible] போராடிப் பெறுவோம்"

(உ-எ-10)

## ஆகாய ரோந்து

யாழ்ப்பாணம், மார்ச் 23

இன்று காலை முதல் யாழ் நகர்ப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களும், விமானங்களும் வட்டமிட்டுத் திரிந்தன

எனினும் காலை 7 மணிக்குப் பின்னர் ஆகாயத் தாக்குதல்கள் எதுவும் நகரில் நடைபெறவில்லை. (உ-10)

## காயமுற்றோர்

இன்றுகாலை படையினர் நடத்திய தாக்குதல்களில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போரில் சிலரின் விவரம்:

என் தங்கம்மா (வயது 70), எச் சசிம் (வயது 24), ஆர். சசிதரன் (வயது 5), பேபி (21 வயது), கனகசபேசன் (20 வயது), இன்பம் (20 வயது) என். சுந்தர், எஸ் வேலு இவர்களை வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். (உ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்
தாயின் மடியில்: 30-12-1963
ஆண்டவன் அடியில்: 22-2 1987

கலை ஆர்வம் கலைத்தாகம்
கலையுணர்வு கலையின்பம்
கலையே தன் மூச்சான
கலைச்செல்வா நினது எழில்
களை ததும்பும் கனிவதனம்
காசினியில் காண்போமா?
கலந்ததுவே மனச்சாந்தி
கண்ணீராய்ப் பெருகுதடா

துடிக்கின்றோம் நின் பிரிவால்
துயரமது ததும்பக் கண்ணீர்
வடிக்கின்றோம் வாழ்வினிலே
வருந்தியே துயரமதைக்
குடிக்கின்றோம் இளவயதில்
கொடிய யமன் நின் வாழ்வை
முடித்தனனே கொடுமை இதை
தப்பதும் கேட்டிலை யோ?

கைவண்ண மலர்களெல்லாம்
கவின் ஆரமாய் மிளிரும்
செய்வண்ணம் அலங்கரிக்கும
சேர்ந்தன் திருமேனி
வையகத்தில் நின் முகத்தை
வாழ்வினிலே பார்ப்போமா
பொய்யனவே புவி விட்டு
மெய்யுலகம் சென்றனையோ?

அன்பொழுகும் பேச்செங்கே
அருள் நிறைந்த பார்வை எங்கே
இன்பமாய் முனிந்திரு நல்
இன் சொலும் கேட்போமோ
துன்பமதால் கதறுகின்றோம்
தூயவனே கலைச்செல்வா
கண்டனிக நீ இந்தக்
காசினி விட்டேகினையோ?

மறப்போமோ நின் முகத்தை
மா கலைச்செல்வனே நீ
இறப்பது உண்மை அல்ல
இறைகிறாய் இதயத்திலே
உறப்பணியான தொண்டு
உள்ளம் படைத்தவனே
அறத்திறன் கண்டு இந்த
அவனியே துடிக்குதடா.

கொக்குவில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய
(முதலிய)கோயில்
சைவ இளைஞர்கள்

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலி ஸ்ராஸ் வியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி


வீரரின் பெயர் ____
கல்லூரி ____
வாக்காளர் பெயர் ____
விலாசம் ____
ஒப்பம் ____

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 23 - 03 - 1987 தொலைபேசி இல. 24605, 23073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at th General Post Office, Under Number QJ / 94 /N /87, Telephone, 24605, 23073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org